LORDS TODAY - International Social Media & Magazine

LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Feb. 2021
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Owner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS







LORDS CLUBS INTERNATIONAL



# LORDS TODAY




BHAGAVAD GITA




BIBLE




KURAN

2021- 16796675753

www.lordsclubs.com



# தலையங்கம்...

## உலக மக்களின் மூன்று மதம் வேத நூல்கள்

### தொடர் 1




**BHAGAVAD GITA-Tamil**
6 Page's
தொடரும்.....




**BIBLE Tamil**
6 Page's
தொடரும்.....




**KURAN Tamil**
6 Page's
தொடரும்.....




உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக உலக மக்கள் நலன்கருதி உலகிலேயே முதல்முறையாக உலகத்தரம் வாய்ந்த 3 மதம் வேதநூல் மெகாத்தொடர் ஒவ்வொரு மாதமும் பகவத் கீதை ஆறு பக்கங்களும் பைபிள் ஆறு பக்கங்களும் குரான் ஆறு பக்கங்களும் ஆக மொத்தம் 18 பக்கங்கள் இனி மாதம் தோரும் தவறாமல் தமிழில் பிரசுரிக்கப்பட்டு வெளிவரும் என்று அனைத்து வாசகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் முற்றிலுமாகப் படித்து முடித்த இந்த 3மத வேதநூல்களையும் பொதுமக்கள் அனைவரும் பக்த்தியுடன் படித்து ஊழல் பாவங்கள் உட்பட அனைத்து பாவங்களும் செய்யாமல் நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என பொதுமக்கள் அனைவருக்கும் அன்புடன் வேண்டுகோள் வைக்கின்றேன். இனி நல்லதை படித்து நல்லதை படைத்து, இவ்வுலக மக்களுக்கு நல்லதையே செய்து பொதுமக்களின் அனவைருடைய பொருளாதாரத்தையும் உயர்திடுவோம். அன்புடன் உங்கள்,

லார்ட்ஸ் மபால்ராஜ்

**LORDS TODAY**
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner
**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com




ॐ

# श्रीमद्भगवद्गीता ।

# பகவத் கீதை.

## प्रथमोऽध्यायः

## முதலத்யாயம்.

குரு க்ஷேத்திரப் போர் நடக்கையிலே கண்ணில்லாத திருதராஷ்ட்ர ராஜன் தான் அங்கு செல்லக் கூடாமையால் ஹஸ்தினாபுரத்தின் நகரமனையில் இருந்து கொண்டே போர்க் களத்தில் நடக்கும் செய்திகளைத் தனக்குச் சொல்லும் படி ஸஞ்ஜயன் என்ற மந்திரியை நியமிக்கிறான். வேத வியாஸ ரருளால் ஞானதிருஷ்டி பெற்றவனாய் ஸஞ்ஜயன் போர்க் களத்துச் செய்திகளை திருதராஷ்ட்ரனுக்குச் சொல்லுகிறான். கண்ணனுக்கும் பார்த்தனுக்கும் போர்த் தொடக்கத்தில் நிகழ்ந்த ஸம்பாஷணையை ஸஞ்ஜயன் கூறுவதாகச் சமைக்கப்பட்ட பகவத்கீதைக்கு இந்த முதலத்தியாயம் பாயிரமாகக் கருதத் தகும்.




## அர்ஜுனன் துயரம்.

धृतराष्ट्र उवाच—

**धर्मक्षेत्रे कुरुक्षेत्रे समवेता युयुत्सवः ।**
**मामकाः पाण्डवाश्चैव किमकुर्वत सञ्जय ॥ १ ॥**

திருதராஷ்ட்ரன் சொல்லுகிறான்—

ஸஞ்ஜயா, அற நில மாகிய குரு நிலத்தில் போர் செய்ய விரும்பித் திரண்ட நம்மவர்களும் பாண்டவரும் என்ன செய்தனர்? 1

सञ्जय उवाच—

**दृष्ट्वा तु पाण्डवानीकं**
**व्यूढं दुर्योधनस्तदा ।**
**आचार्यमुपसङ्गम्य राजा**
**वचनमब्रवीत् ॥ २ ॥**

ஸஞ்ஜயன் சொல்லுகிறான்—

அப்போது துர்யோதன ராஜன் அணிவகுத்து நின்ற பாண்டவர் படையைப் பார்த்துவிட்டு, ஆசார்ய (த்ரோண) னிடம் போய் (ப்பின் வரும்) வார்த்தை சொல்லலாயினன்:— 2




पश्यैतां पाण्डुपुत्राणामाचार्य महतीं चमूम् ।
व्यूढां द्रुपदपुत्रेण तव शिष्येण धीमता ॥ ३ ॥

"குருவே, துருபதன் மகனும் நின் சீடனு
மாகிய நிபுணனால் வகுப்புற்ற இப் பெரிய
பாண்டவப் படையைப் பார்! 3

अत्र शूरा महेष्वासा भीमार्जुनसमा युधि ।
युयुधानो विराटश्च द्रुपदश्च महारथः ॥ ४ ॥

இங்கு சூரரும் பெரிய வில்லாளிகளும்,
போரில் வீமனையும் பார்த்தனையும் நிகர்த்தவரு
மாகிய பலர் இருக்கிறார்கள்:—யுயுதானன்; விரா
டன்; மஹாரதனாகிய துருபதன்; 4

धृष्टकेतुश्चेकितानः काशिराजश्च वीर्यवान् ।
पुरुजित्कुन्तिभोजश्च शैब्यश्च नरपुङ्गवः ॥ ५ ॥

திருஷ்டகேது; சேகிதானன்; வீர்ய முடைய
காசிராஜன்; புருஜித்; குந்தி போஜன்; மனிதரே
றாகிய சைவியன்.




युधामन्युश्च विक्रान्त उत्तमौजाश्च वीर्यवान् ।
सौभद्रो द्रौपदेयाश्च सर्व एव महारथाः ॥ ६ ॥

வலிமை மிக்க யுதாமன்யு; உத்தமௌஜா
என்ற வீரன்; ஸுபத்ரை மகன்; த்ரௌபதி
மக்கள்; எல்லாருமே மஹாரதர். 6

अस्माकं तु विशिष्टा ये तान्निबोध द्विजोत्तम ।
नायका मम सैन्यस्य संज्ञार्थं तान्ब्रवीमि ते ॥७॥

இனி, எனது படைக்கு நாயகராய், நம்
முன்னே சிறந்தோரையுந் தெரிந்து கொள்.
இருபிறப்பாளரில் மேம்பட்டவனே, குறிப்பின்
பொருட்டாக அவர்களை உனக்குச் சொல்லு
கிறேன். 7

भवान्भीष्मश्च कर्णश्च कृपश्च समितिञ्जयः ।
अश्वत्थामा विकर्णश्च सौमदत्तिस्तथैव च ॥ ८॥

நீ; பீஷ்மன்; கர்ணன்; பொருநர் கூட்
டத்தை வெல்வோனாகிய கிருபன்; ஸோமதத்
தன் மகன்; 8

अन्ये च बहवः शूरा मदर्थे त्यक्तजीविताः ।
नानाशस्त्रप्रहरणाः सर्वे युद्धविशारदाः ॥ ९ ॥

இன்னும் வேறு பல சூரர்; என் பொருட்டு
வாழ்க்கையைத் துறந்தோர்; பல விதமான
ஆயுதங்களும் அம்புகளு முடையோர்! எல்
லோருமே போரில் நிபுணர். 9

अपर्याप्तं तदस्माकं बलं भीष्माभिरक्षितम् ।
पर्याप्तं त्विदमेतेषां बलं भीमाभिरक्षितम् ॥ १० ॥

(எனினும்) பீஷ்மனால் காக்கப்படும் நமது
படை (கண்ணுக்கு) நிறைந் திருக்க வில்லை.
வீமனால் காக்கப் படும் இவர்களுடைய படை
யோ நிறைந் திருக்கிறது. 10

अयनेषु च सर्वेषु यथाभागमवस्थिताः ।
भीष्ममेवाभिरक्षन्तु भवन्तः सर्व एव हि ॥ ११ ॥

நீங்க ளனைவரும் வகுப்புக்களின்படி எல்லா
இடங்களிலும் நின்றுகொண்டு பீஷ்மனையே
காக்கக்கடவீர்." 11




**तस्य सञ्जनयन्हर्षं कुरुवृद्धः पितामहः ।**
**सिंहनादं विनद्योच्चैः शङ्खं दध्मौ प्रतापवान् ॥**

(அப்போது) துர்யோதனனுக்கு மகிழ்ச்சி
விளைவிக்குமாறு கீர்த்தி மிக்க கௌரவர் கிழவ
னாகிய பாட்டன் உயர்ந்த குரலில் சிங்க நாதம்
புரிந்து சங்கை யூதினான். 12

**ततः शङ्खाश्च भेर्यश्च पणवानकगोमुखाः ।**
**सहसैवाभ्यहन्यन्त स शब्दस्तुमुलोऽभवत् ॥१३॥**

அப்பால், சங்குகளும், பேரிகைகளும், தம்
பட்டங்களும், பறைகளும், கொம்புகளும் திடீ
ரென ஒலித்தன. அஃது பேரோசை
யாயிற்று. 13

**ततः श्वेतैर्हयैर्युक्ते महति स्यन्दने स्थितौ ।**
**माधवः पाण्डवश्चैव दिव्यौ शङ्खौ प्रदध्मतुः ॥१४॥**

பின்பு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய பெருந்
தேரில் நின்ற மாதவனும் பார்த்தனும் (தம்
முடைய) தேவச் சங்குகளை யூதினர். 14

தொடரும்.....

# BIBLE




**தொடக்கநூல் அதிகாரம் –1 – திருவிவிலியம்**

1 தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தபொழுது,

2 மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது.

3 அப்பொழுது கடவுள், “ஒளி தோன்றுக!” என்றார்; ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லது என்று கண்டார்.

4 கடவுள் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார்.

5 கடவுள் ஒளிக்குப் பகல் என்றும் இருளுக்கு இரவு என்றும் பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று முதல் நாள் முடிந்தது.

6 அப்பொழுது கடவுள், “நீர்த்திரளுக்கு இடையில், வானம் தோன்றுக! அது நீரினின்று நீரைப் பிரிக்கட்டும்” என்றார்.

7 கடவுள் வானத்தை உருவாக்கி வானத்திற்குக் கீழுள்ள நீரையும் வானத்திற்கு மேலுள்ள நீரையும் பிரித்தார். அது அவ்வாறே ஆயிற்று.

8 கடவுள் வானத்திற்கு “விண்ணுலகம் என்று பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று இரண்டாம் நாள் முடிந்தது.

9 அப்பொழுது கடவுள், “விண்ணுலகுக்குக் கீழுள்ள நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்றுசேர உலர்ந்த தரை தோன்றுக!” என்றார். அது அவ்வாறே ஆயிற்று.

10 கடவுள் உலர்ந்த தரைக்கு நிலம் என்றும் ஒன்றுதிரண்ட நீருக்குக் கடல் என்றும் பெயரிட்டார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

# BIBLE




11 அப்பொழுது கடவுள், “புற்பூண்டுகளையும் விதை தரும் செடிகளையும், கனி தரும் பழமரங்களையும் அந்த அந்த இனத்தின்படியே நிலம் விளைவிக்கட்டும்” என்றார். அது அவ்வாறே ஆயிற்று.

12 புற்ப+ண்டுகளையும் விதையைப் பிறப்பிக்கும் செடிகளையும் கனிதரும் மரங்களையும் அந்த அந்த இனத்தின்படி நிலம் விளைவித்தது. கடவுள் அது நல்லது என்று கண்டார்.

13 மாலையும், காலையும் நிறைவுற்று மூன்றாம் நாள் முடிந்தது.

14 அப்பொழுது கடவுள், “பகலையும் இரவையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் காலங்கள், நாள்கள், ஆண்டுகள் ஆகியவற்றைக் குறிப்பதற்கும் விண்விரிவினில் ஒளிப்பிழம்புகள் தோன்றுக!

15 அவை மண்ணுலகிற்கு ஒளிதர விண்விரிவினில் ஒளிப்பிழம்புகளாக இருக்கட்டும்” என்றார். அது அவ்வாறே ஆயிற்று.

16 கடவுள் இருபெரும் ஒளிப்பிழம்புகளை உருவாக்கினார். பகலை ஆள்வதற்குப் பெரிய ஒளிப்பிழம்பையும், இரவை ஆள்வதற்குச் சிறிய ஒளிப்பிழம்பையும் மற்றும் விண்மீன்களையும் அவர் உருவாக்கினார்.

17 கடவுள் மண்ணுலகிற்கு ஒளிதர விண்ணுலக வானத்தில் அவற்றை அமைத்தார்;

18 பகலையும் இரவையும் ஆள்வதற்கும் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் அவற்றை அமைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

19 மாலையும் காலையும் நிறைவுற்று நான்காம் நாள் முடிந்தது.

20 அப்பொழுது கடவுள், “திரளான உயிரினங்களைத் தண்ணீர் தோற்றுவிப்பதாக! விண்ணுலக வானத்தில் நிலத்திற்கு மேலே பறவைகள் பறப்பனவாக!” என்றார்.

# BIBLE




21 இவ்வாறு, கடலின் பெரும் பாம்புகளையும், திரள் திரளாக நீரில் நீந்திவாழும் உயிரினங்களையும், இறக்கையுள்ள எல்லாவிதப் பறவைகளையும் அவ்வவற்றின் இனத்தின்படி கடவுள் படைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

22 கடவுள் அவற்றிற்கு ஆசி வழங்கி "பலுகிப் பெருகிக் கடல் நீரை நிரப்புங்கள். பறவைகளும் மண்ணுலகில் பெருகட்டும்" என்றுரைத்தார்.

23 மாலையும் காலையும் நிறைவுற்று, ஐந்தாம் நாள் முடிந்தது.

24 அப்பொழுது கடவுள், "கால்நடைகள், ஊர்வன, காட்டுவிலங்குகள் ஆகியவற்றை அவ்வவற்றின் இனத்தின்படி நிலம் தோற்றுவிப்பதாக" என்றார்.

25 கடவுள் காட்டு விலங்குகளையும் கால்நடைகளையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் அவ்வவற்றின் இனத்தின்படி உருவாக்கினார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

26 அப்பொழுது கடவுள், "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" என்றார்.

27 கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.

28 கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார்.

29 அப்பொழுது கடவுள், "மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன்; இவை உங்களுக்கு உணவாகட்டும்.

# BIBLE




30 எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில்
ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள்
அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்" என்றார். அது
அவ்வாறே ஆயிற்று.

31 கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை
மிகவும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாம்
நாள் முடிந்தது.

தொடக்கநூல் அதிகாரம் – 2 – திருவிவிலியம்

1 விண்ணுலகும் மண்ணுலகும் அவற்றில் உள்ள அமைப்புகள்
அனைத்தும் உருவாக்கப் பெற்று நிறைவெய்தின.

2 மேலும் கடவுள் தாம் செய்த வேலையை ஏழாம் நாளில்
முடித்திருந்தார். அவர் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவு
பெறச்செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்.

3 கடவுள் ஏழாம் நாளுக்கு ஆசி வழங்கி, அதைப் புனிதப்படுத்தினார்.
ஏனெனில் கடவுள் தாம் செய்த படைப்பு வேலைகள் அனைத்தையும்
நிறைவு பெறச் செய்து அந்நாளில்தான் ஓய்ந்திருந்தார்.

4 இவையே விண்ணுலக, மண்ணுலகப் படைப்பின் தோற்ற
முறைமையாம். ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகையும்,
விண்ணுலகையும் உருவாக்கிய பொழுது,

5 மண்ணுலகில் நிலவெளியில் எவ்விதப் புதரும்
தோன்றியிருக்கவில்லை; வயல்வெளியின் எவ்விதச் செடியும்
முளைத்திருக்கவில்லை; ஏனெனில் ஆண்டவராகிய கடவுள்
மண்ணுலகின்மேல் இன்னும் மழை பெய்விக்கவில்லை; மண்ணைப்
பண்படுத்த மானிடர் எவரும் இருக்கவில்லை.

6 ஆனால் நிலத்திலிருந்து மூடுபனி எழும்பி நிலம் முழுவதையும்
நனைத்தது.

# BIBLE



7 அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்.

8 ஆண்டவராகிய கடவுள் கிழக்கே இருந்த ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்துத் தாம் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார்.

9 ஆண்டவராகிய கடவுள் கண்ணுக்கு அழகானதும் உண்பதற்குச் சுவையானதுமான எல்லா வகை மரங்களையும், தோட்டத்தின் நடுவில் வாழ்வின் மரத்தையும் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தையும் மண்ணிலிருந்து வளரச் செய்தார்.

10 தோட்டத்திற்குள் நீர் பாய்வதற்காக ஏதேனிலிருந்து ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. அது அங்கிருந்து பிரிந்து நான்கு சிறப்புமிகு ஆறுகள் ஆயிற்று.

11 முதலாவதன் பெயர் பீசோன். இது கவிலா நாடு முழுவதும் வளைந்து ஓடுகின்றது. அங்கே பொன் விளையும்.

12 அந்நாட்டுப் பொன் பசும்பொன். அங்கே நறுமணப் பொருள்களும் வண்ண மணிக்கற்களும் உண்டு.

13 இரண்டாவது ஆற்றின் பெயர் கீகோன். இது எத்தியோப்பியா நாடு முழுவதும் வளைந்து ஓடுகின்றது.

14 மூன்றாவது ஆற்றின் பெயர் திக்ரீசு. இது அசீரியாவிற்குக் கிழக்கே, ஓடுகின்றது. நான்காவது ஆறு யூப்பிரத்தீசு.

15 ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.

16 ஆண்டவராகிய கடவுள் மனிதனிடம், “தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம்.

# BIBLE




17 ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே; ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்"; என்று கட்டளையிட்டுச் சொன்னார்.

18 பின்பு ஆண்டவராகிய கடவுள், மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று; அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் என்றார்.

19 ஆண்டவராகிய கடவுள் மண்ணிலிருந்து எல்லாக் காட்டு விலங்குகளையும் வானத்துப் பறவைகளையும் உருவாக்கி, அவற்றிற்கு மனிதன் என்ன பெயரிடுவான் என்று பார்க்க, அவற்றை அவனிடம் கொண்டு வந்தார். உயிருள்ள ஒவ்வொன்றுக்கும் அவன் என்ன பெயரிட்டானோ அதுவே அதன் பெயராயிற்று.

20 கால்நடைகள், வானத்துப் பறவைகள், காட்டு விலங்குகள் ஆகிய எல்லாவற்றிற்கும் மனிதன் பெயரிட்டான்; தனக்குத் தகுந்த துணையையோ மனிதன் காணவில்லை.

21 ஆகவே ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச்செய்து, அவன் உறங்கும் பொழுது அவன் விலா எலும்பு ஒன்றை எடுத்துக்கொண்டு, எடுத்த இடத்தைச் சதையால் அடைத்தார்.

22 ஆண்டவராகிய கடவுள் தாம் மனிதனிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கி மனிதனிடம் அழைத்துவந்தார்.

23 அப்பொழுது மனிதன், "இதோ! இவளே என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள்; ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால், இவள் பெண் என்று அழைக்கப்படுவாள்" என்றான்.

24 இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான்; இருவரும் ஒரே உடலாய் இருப்பர்.

25 மனிதன், அவன் மனைவி ஆகிய இருவரும் ஆடையின்றி இருந்தனர். ஆனால் அவர்கள் வெட்கப்படவில்லை.

தொடரும்.....

# KURAN




1. அல்:பாத்திஹா(தோற்றுவாய்)
மக்கீ, வசனங்கள்: 7
1:1 بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
1:1. அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகிறேன்)
1:2 اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ
1:2. அனைத்து புகழும், அகிலங்கள் எல்லாவற்றையும் படைத்து வளர்த்துப் பரிபக்குவப்படுத்தும் (நாயனான) அல்லாஹ்வுக்கே ஆகும்.
1:3 الرَّحْمٰنِ الرَّحِيْمِ
1:3. (அவன்) அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன்.
1:4 مٰلِكِ يَوْمِ الدِّيْنِ
1:4. (அவனே நியாயத்) தீர்ப்பு நாளின் அதிபதி(யும் ஆவான்).
1:5 اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ
1:5. (இறைவா!)உன்னையே நாங்கள் வணங்குகிறோம்; உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்.
1:6 اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ
1:6. நீ எங்களை நேர்வழியில் நடத்துவாயாக!
1:7 صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ
1:7. (அது) நீ எவர்களுக்கு அருள் புரிந்தாயோ அவ்வழி. (அது) உன் கோபத்திற்கு ஆளானோர் வழி|யுமல்ல நெறி தவறியோர் வழியுமல்ல.

2. ஸூரத்துல் பகரா (பசு மாடு)
மதனீ, வசனங்கள்: 286
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகிறேன்)
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
**ருகூஃ: 1**

2:1. அலிஃப், லாம், மீம்.
2:2 ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ فِيْهِ هُدًى لِّلْمُتَّقِيْنَ
2:2. இது, (அல்லாஹ்வின்) திருவேதமாகும்; இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை; பயபக்தியுடையோருக்கு (இது) நேர்வழிகாட்டியாகும்.
2:3 الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ وَيُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ




2:3. (பயபக்தியுடைய) அவர்கள், (புலன்களுக்கு எட்டா) மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வார்கள்; தொழுகையையும் கடைப்பிடிப்பார்கள்; இன்னும் நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து (நல்வழியில்) செலவும் செய்வார்கள்.

2:4 وَالَّذِينَ يُؤْمِنُونَ بِمَا أُنزِلَ إِلَيْكَ وَمَا أُنزِلَ مِن قَبْلِكَ وَبِالْآخِرَةِ هُمْ يُوقِنُونَ

2:4. (நபியே!) இன்னும் அவர்கள் உமக்கு அருளப்பெற்ற (வேதத்)தின் மீதும் உமக்கு முன்னர் அருளப்பட்டவை மீதும் நம்பிக்கை கொள்வார்கள்; இன்னும் ஆகிரத்தை(மறுமையை) உறுதியாக நம்புவார்கள்.

2:5 أُولَٰئِكَ عَلَىٰ هُدًى مِّن رَّبِّهِمْ ۖ وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ

2:5. இவர்கள் தாம் தங்கள் இறைவனின் நேர்வழியில் இருப்பவர்கள்; மேலும் இவர்களே வெற்றியாளர்கள்.

2:6 إِنَّ الَّذِينَ كَفَرُوا سَوَاءٌ عَلَيْهِمْ أَأَنذَرْتَهُمْ أَمْ لَمْ تُنذِرْهُمْ لَا يُؤْمِنُونَ

2:6. நிச்சயமாக கா∴பிர்களை (இறைவனை நிராகரிப்போரை) நீர் அச்சமூட்டி எச்சரித்தாலும் (சரி) அல்லது எச்சரிக்காவிட்டாலும் சரியே! அவர்கள் ஈமான் (இறை நம்பிக்கை) கொள்ள மாட்டார்கள்.

2:7 خَتَمَ اللَّهُ عَلَىٰ قُلُوبِهِمْ وَعَلَىٰ سَمْعِهِمْ ۖ وَعَلَىٰ أَبْصَارِهِمْ غِشَاوَةٌ ۖ وَلَهُمْ عَذَابٌ عَظِيمٌ

2:7. அல்லாஹ் அவர்களின் இதயங்களிலும், அவர்கள் செவிப்புலன்களிலும் முத்திரை வைத்துவிட்டான் இன்னும் அவர்களின் பார்வை மீது ஒரு திரை கிடக்கிறது; மேலும் அவர்களுக்கு கடுமையான வேதனையுமுண்டு.

2:8 وَمِنَ النَّاسِ مَن يَقُولُ آمَنَّا بِاللَّهِ وَبِالْيَوْمِ الْآخِرِ وَمَا هُم بِمُؤْمِنِينَ

2:8. இன்னும் மனிதர்களில் "நாங்கள் அல்லாஹ்வின் மீதும், இறுதி(த் தீர்ப்பு) நாள் மீதும் ஈமான் (நம்பிக்கை) கொள்கிறோம்" என்று கூறுவோறும் இருக்கின்றனர்; ஆனால் (உண்மையில்) அவர்கள் நம்பிக்கை கொண்டோர் அல்லர்.

2:9 يُخَادِعُونَ اللَّهَ وَالَّذِينَ آمَنُوا وَمَا يَخْدَعُونَ إِلَّا أَنفُسَهُمْ وَمَا يَشْعُرُونَ

2:9. (இவ்வாறு கூறி) அவர்கள் அல்லாஹ்வையும், ஈமான் (இறை நம்பிக்கை) கொண்டோரையும் ஏமாற்ற நினைக்கின்றார்கள்; ஆனால் அவர்கள் (உண்மையில்) தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்கிறார்களே தவிர வேறில்லை; எனினும் அவர்கள் (இதை) உணர்ந்து கொள்ளவில்லை.

2:10 فِي قُلُوبِهِم مَّرَضٌ فَزَادَهُمُ اللَّهُ مَرَضًا ۖ وَلَهُمْ عَذَابٌ أَلِيمٌ بِمَا كَانُوا يَكْذِبُونَ

2:10. அவர்களுடைய இதயங்களில் ஒரு நோயுள்ளது; அல்லாஹ் (அந்த) நோயை அவர்களுக்கு இன்னும் அதிகமாக்கி விட்டான்; மேலும் அவர்கள் பொய்சொல்லும் காரணத்தினால் அவர்களுக்குத் துன்பந்தரும் வேதனையும் உண்டு.




2:11 وإذا قيل لهم لا تفسدوا في الأرض قالوا إنما نحن مصلحون

2:11. “பூமியில் குழப்பத்தை உண்டாக்காதீர்கள்” என்று அவர்களிடம் சொல்லப்பட்டால் “நிச்சயமாக நாங்கள் தாம் சமாதானவாதிகள்” என்று அவர்கள் சொல்கிறார்கள்.

2:12 ألا إنهم هم المفسدون ولكن لا يشعرون

2:12. நிச்சயமாக அவர்கள் தாம் குழப்பம் உண்டாக்குபவர்கள் அன்றோ; ஆனால் அவர்கள் (இதை) உணர்கிறார்களில்லை.

2:13 وإذا قيل لهم آمنوا كما آمن الناس قالوا أنؤمن كما آمن السفهاء ألا إنهم هم السفهاء ولكن لا يعلمون

2:13. (மற்ற) மனிதர்கள் ஈமான் கொண்டது போன்று நீங்களும் ஈமான் கொள்ளுங்கள் என்று அவர்களிடம் சொல்லப்பட்டால், “மூடர்கள் ஈமான் (நம்பிக்கை) கொண்டது போல், நாங்களும் ஈமான் (நம்பிக்கை) கொள்ளவேண்டுமா?” என்று கூறுகிறார்கள் (அப்படியல்ல;) நிச்சயமாக இ(ப்படிக் கூறுப)வர்களே மூடர்கள். ஆயினும் (தம் மடமையை) இவர்கள் அறிவதில்லை.

2:14 وإذا لقوا الذين آمنوا قالوا آمنا وإذا خلوا إلى شياطينهم قالوا إنا معكم إنما نحن مستهزئون

2:14. இன்னும் (இந்தப் போலி விசுவாசிகள்) ஈமான் கொண்டிருப்போரைச் சந்திக்கும் போது, “நாங்கள் ஈமான் கொண்டிருக்கிறோம்” என்று கூறுகிறார்கள்; ஆனால் அவர்கள் தங்கள் (தலைவர்களாகிய) ஷைத்தான்களுடன் தனித்திருக்கும்போது, “நிச்சயமாக நாங்கள் உங்களுடன்தான் இருக்கிறோம்; நிச்சயமாக நாங்கள் (அவர்களைப்) பரிகாசம் செய்பவர்களாகவே இருக்கிறோம்” எனக் கூறுகிறார்கள்.

2:15 الله يستهزئ بهم ويمدهم في طغيانهم يعمهون

2:15. அல்லாஹ் இவர்களைப் பரிகசிக்கிறான். இன்னும் இவர்களின் வழிகேட்டிலேயே கபோதிகளாகத் தட்டழியும்படி விட்டு விடுகிறான்.

2:16 أولئك الذين اشتروا الضلالة بالهدى فما ربحت تجارتهم وما كانوا مهتدين

2:16. இவர்கள் தாம் நேர்வழிக்கு பதிலாகத் தவறான வழியைக் கொள்முதல் செய்து கொண்டவர்கள்; இவர்களுடைய (இந்த) வியாபாரம் இலாபம் தராது; மேலும் இவர்கள் நேர்வழி பெறுபவர்களும் அல்லர்.

2:17 مثلهم كمثل الذي استوقد نارا فلما أضاءت ما حوله ذهب الله بنورهم وتركهم في ظلمات لا يبصرون

2:17. இத்தகையோருக்கு ஓர் உதாரணம் நெருப்பை மூட்டிய ஒருவனின் உதாரணத்தைப் போன்றது. அ(ந் நெருப்பான)து அவனைச் சுற்றிலும் ஒளி வீசியபோது, அல்லாஹ் அவர்களுடைய ஒளியைப் பறித்துவிட்டான்; இன்னும் பார்க்க முடியாத காரிருளில் அவர்களை விட்டு விட்டான்.

2:18 صم بكم عمي فهم لا يرجعون



2:18. (அவர்கள்) செவிடர்களாக, ஊமையர்களாக, குருடர்களாக இருக்கின்றனர். எனவே அவர்கள் (நேரான வழியின் பக்கம்) மீள மாட்டார்கள்.

2:19 أَوْ كَصَيِّبٍ مِنَ السَّمَاءِ فِيهِ ظُلُمَاتٌ وَرَعْدٌ وَبَرْقٌ يَجْعَلُونَ أَصَابِعَهُمْ فِي آذَانِهِمْ مِنَ الصَّوَاعِقِ حَذَرَ الْمَوْتِ وَاللَّهُ مُحِيطٌ بِالْكَافِرِينَ

2:19. அல்லது, (இன்னும் ஓர் உதாரணம்) காரிருளும், இடியும், மின்னலும் கொண்டு வானத்திலிருந்து கடுமழை கொட்டும் மேகம்; (இதிலகப்பட்டுக்கொண்டோர்) மரணத்திற்கு அஞ்சி இடியோசையினால், தங்கள் விரல்களைத் தம் காதுகளில் வைத்துக் கொள்கிறார்கள்; ஆனால் அல்லாஹ் (எப்போதும் இந்த) காஃபிர்களைச் சூழ்ந்தவனாகவே இருக்கின்றான்.

2:20 يَكَادُ الْبَرْقُ يَخْطَفُ أَبْصَارَهُمْ كُلَّمَا أَضَاءَ لَهُمْ مَشَوْا فِيهِ وَإِذَا أَظْلَمَ عَلَيْهِمْ قَامُوا وَلَوْ شَاءَ اللَّهُ لَذَهَبَ بِسَمْعِهِمْ وَأَبْصَارِهِمْ إِنَّ اللَّهَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

2:20. அம்மின்னல் அவர்களின் பார்வைகளைப் பறித்துவிடப் பார்க்கிறது. அ(ம் மின்னலான)து அவர்களுக்கு ஒளி தரும் போதெல்லாம், அவர்கள் அத(ன் துணையினா)ல் நடக்கிறார்கள்; அவர்களை இருள் சூழ்ந்து கொள்ளும் போது (வழியறியாது) நின்றுவிடுகிறார்கள்; மேலும் அல்லாஹ் நாடினால் அவர்களுடைய கேள்விப் புலனையும், பார்வைகளையும் போக்கிவிடுவான்; நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றல் உடையவன்.

2:21 يَا أَيُّهَا النَّاسُ اعْبُدُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ وَالَّذِينَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ

2:21. மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். (அதனால்) நீங்கள் தக்வா (இறையச்சமும்; தூய்மையும்) உடையோராகலாம்.

2:22 الَّذِي جَعَلَ لَكُمُ الْأَرْضَ فِرَاشًا وَالسَّمَاءَ بِنَاءً وَأَنْزَلَ مِنَ السَّمَاءِ مَاءً فَأَخْرَجَ بِهِ مِنَ الثَّمَرَاتِ رِزْقًا لَكُمْ فَلَا تَجْعَلُوا لِلَّهِ أَنْدَادًا وَأَنْتُمْ تَعْلَمُونَ

2:22. அ(ந்த இறை)வனே உங்களுக்காக பூமியை விரிப்பாகவும், வானத்தை விதானமாகவும் அமைத்து, வானத்திலிருந்து மழை பொழியச்செய்து; அதனின்று உங்கள் உணவிற்காகக் கனி வர்க்கங்களை வெளிவரச் செய்கிறான்; (இந்த உண்மைகளையெல்லாம்) நீங்கள் அறிந்து கொண்டே இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள்.

2:23 وَإِنْ كُنْتُمْ فِي رَيْبٍ مِمَّا نَزَّلْنَا عَلَى عَبْدِنَا فَأْتُوا بِسُورَةٍ مِنْ مِثْلِهِ وَادْعُوا شُهَدَاءَكُمْ مِنْ دُونِ اللَّهِ إِنْ كُنْتُمْ صَادِقِينَ

2:23. இன்னும், ((முஹம்மது (ஸல்) என்ற) நம் அடியாருக்கு நாம் அருளியுள்ள (வேதத்)தில் நீங்கள் சந்தேகம் உடையோராக இருப்பீர்களானால், (அந்த சந்தேகத்தில்) உண்மை உடையோராகவும்




இருப்பீர்களானால் அல்லாஹ்வைத்தவிர உங்கள் உதவியாளர்களை (யெல்லாம் ஒன்றாக) அழைத்து (வைத்து)க்கொண்டு இது போன்ற ஓர் அத்தியாயமேனும் கொண்டு வாருங்கள்.

2:24 فإن لم تفعلوا ولن تفعلوا فاتقوا النار التي وقودها الناس والحجارة أعدت للكافرين

2:24. (அப்படி) நீங்கள் செய்யாவிட்டால்-அப்படி செய்ய உங்களால் திண்ணமாக முடியாது- மனிதர்களையும் கற்களையும் எரிபொருளாகக் கொண்ட நரக நெருப்பை அஞ்சிக் கொள்ளுங்கள். (அந்த நெருப்பு, இறைவனையும் அவன் வேதத்தையும் ஏற்க மறுக்கும்) கா:பிர்களுக்காகவே அது சித்தப்படுத்தப்பட்டுள்ளது.

2:25 وبشر الذين آمنوا وعملوا الصالحات أن لهم جنات تجري من تحتها الأنهار كلما رزقوا منها من ثمرة رزقا قالوا هذا الذي رزقنا من قبل وأتوا به متشابها ولهم فيها أزواج مطهرة وهم فيها خالدون

2:25. (ஆனால்) நம்பிக்கை கொண்டு நற்கருமங்கள் செய்வோருக்கு நன்மாராயங்கள் கூறுவீராக; சதா ஓடிக்கொண்டிருக்கும் ஆறுகளைக் கொண்ட சுவனச் சோலைகள் அவர்களுக்காக உண்டு; அவர்களுக்கு உண்ண அங்கிருந்து ஏதாவது கனி கொடுக்கப்படும்போதெல்லாம் "இதுவே முன்னரும் நமக்கு (உலகில்) கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறுவார்கள்; ஆனால் (தோற்றத்தில்) இது போன்றதுதான் (அவர்களுக்கு உலகத்தில்) கொடுக்கப்பட்டிருந்தன; இன்னும் அவர்களுக்கு அங்கு தூய துணைவியரும் உண்டு; மேலும் அவர்கள் அங்கே நிரந்தரமாக வாழ்வார்கள்.

2:26 إن الله لا يستحيي أن يضرب مثلا ما بعوضة فما فوقها فأما الذين آمنوا فيعلمون أنه الحق من ربهم وأما الذين كفروا فيقولون ماذا أراد الله بهذا مثلا يضل به كثيرا ويهدي به كثيرا وما يضل به إلا الفاسقين

2:26. நிச்சயமாக அல்லாஹ் கொசுவையோ, அதிலும் (அற்பத்தில்) மேற்பட்டதையோ உதாரணம் கூறுவதில் வெட்கப்படமாட்டான். (இறை) நம்பிக்கைக் கொண்டவர்கள் நிச்சயமாக அ(வ்வுதாரணமான)து தங்கள் இறைவனிடமிருந்து வந்துள்ள உண்மையென்பதை அறிவார்கள்; ஆனால் (இறை நம்பிக்கையற்ற) கா:பிர்களோ, "இவ்வித உதாரணத்தின் மூலம் இறைவன் என்ன நாடுகிறான்?" என்று (ஏளனமாகக்) கூறுகிறார்கள். அவன் இதைக்கொண்டு பலரை வழிகேட்டில் விடுகிறான்; இன்னும் பலரை இதன்மூலம் நல்வழிப் படுத்துகிறான்; ஆனால் தீயவர்களைத் தவிர (வேறு யாரையும்) அவன் அதனால் வழிகேட்டில் ஆக்குவதில்லை.

2:27 الذين ينقضون عهد الله من بعد ميثاقه ويقطعون ما أمر الله به أن يوصل ويفسدون في الأرض أولئك هم الخاسرون

2:27. இ(த் தீய)வர்கள் அல்லாஹ்விடம் செய்த ஒப்பந்தத்தை, அது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் முறித்து விடுகின்றனர். அல்லாஹ் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்று கட்டளை இட்டதைத் துண்டித்து




விடுவதுடன் பூமியில் குழப்பத்தையும் உண்டாக்குகிறார்கள்; இவர்களே தாம் நஷ்டவாளிகள்.

2:28 كَيْفَ تَكْفُرُونَ بِاللَّهِ وَكُنتُمْ أَمْوَاتًا فَأَحْيَاكُمْ ۖ ثُمَّ يُمِيتُكُمْ ثُمَّ يُحْيِيكُمْ ثُمَّ إِلَيْهِ تُرْجَعُونَ

2:28. நீங்கள் எப்படி அல்லாஹ்வை நம்ப மறுக்கிறீர்கள்? உயிரற்றோராக இருந்த உங்களுக்கு அவனே உயிரூட்டினான்; பின்பு அவன் உங்களை மரணிக்கச்செய்வான்; மீண்டும் உங்களை உயிர் பெறச் செய்வான்; இன்னும் நீங்கள் அவன் பக்கமே திருப்பிக்கொண்டுவரப் படுவீர்கள்.

2:29 هُوَ الَّذِي خَلَقَ لَكُم مَّا فِي الْأَرْضِ جَمِيعًا ثُمَّ اسْتَوَىٰ إِلَى السَّمَاءِ فَسَوَّاهُنَّ سَبْعَ سَمَاوَاتٍ ۚ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

2:29. அ(வ்விறை)வன் எத்தகையவன் என்றால் அவனே உலகத்திலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான்; பின் அவன் வானத்தின் பக்கம் முற்பட்டான்; அவற்றை ஏழு வானங்களாக ஒழுங்காக்கினான். அன்றியும் அவனே ஒவ்வொரு பொருளையும் நன்கறிபவனாக இருக்கிறான்.

2:30 وَإِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَائِكَةِ إِنِّي جَاعِلٌ فِي الْأَرْضِ خَلِيفَةً ۖ قَالُوا أَتَجْعَلُ فِيهَا مَن يُفْسِدُ فِيهَا وَيَسْفِكُ الدِّمَاءَ وَنَحْنُ نُسَبِّحُ بِحَمْدِكَ وَنُقَدِّسُ لَكَ ۖ قَالَ إِنِّي أَعْلَمُ مَا لَا تَعْلَمُونَ

2:30. (நபியே) இன்னும், உம் இறைவன் வானவர்களை நோக்கி "நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப் போகிறேன்" என்று கூறியபோது, அவர்கள் "(இறைவா!) நீ அதில் குழப்பத்தை உண்டாக்கி, இரத்தம் சிந்துவோரையா அமைக்கப்போகிறாய்? இன்னும் நாங்களோ உன் புகழ் ஓதியவர்களாக உன்னைத் துதித்து, உன் பரிசுத்தத்தைப் போற்றியவர்களாக இருக்கின்றோம் என்று கூறினார்கள்; அ(தற்கு இறை)வன் "நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நிச்சயமாக நான் அறிவேன்" எனக் கூறினான்.

2:31 وَعَلَّمَ آدَمَ الْأَسْمَاءَ كُلَّهَا ثُمَّ عَرَضَهُمْ عَلَى الْمَلَائِكَةِ فَقَالَ أَنبِئُونِي بِأَسْمَاءِ هَٰؤُلَاءِ إِن كُنتُمْ صَادِقِينَ

2:31. இன்னும், (இறைவன்) எல்லாப் (பொருட்களின்) பெயர்களையும் ஆதமுக்கு கற்றுக் கொடுத்தான்; பின் அவற்றை வானவர்கள் முன் எடுத்துக்காட்டி, "நீங்கள் (உங்கள் கூற்றில்) உண்மையாளர்களாயிருப்பின் இவற்றின் பெயர்களை எனக்கு விவரியுங்கள்" என்றான்.

Play CopyWordByWord2:32
2:32 قَالُوا سُبْحَانَكَ لَا عِلْمَ لَنَا إِلَّا مَا عَلَّمْتَنَا ۖ إِنَّكَ أَنتَ الْعَلِيمُ الْحَكِيمُ

2:32. அவர்கள் "(இறைவா!) நீயே தூயவன். நீ எங்களுக்குக் கற்றுக்கொடுத்தவை தவிர எதைப்பற்றியும் எங்களுக்கு அறிவு இல்லை. நிச்சயமாக நீயே பேரறிவாளன்; விவேகமிக்கோன்" எனக் கூறினார்கள்.

Play CopyWordByWord2:33
2:33 قَالَ يَا آدَمُ أَنبِئْهُم بِأَسْمَائِهِمْ ۖ فَلَمَّا أَنبَأَهُم بِأَسْمَائِهِمْ قَالَ أَلَمْ أَقُل لَّكُمْ إِنِّي أَعْلَمُ غَيْبَ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَأَعْلَمُ مَا تُبْدُونَ وَمَا كُنتُمْ تَكْتُمُونَ

தொடரும்.....

# Graduate Jobs 2021 | Any Degree Jobs | 25000+ Govt Vacancies

Government Jobs for Graduates and Degree Holders 2021: Under Graduate (UG) 03 Years Degree completed candidates, who are looking for Government jobs in India - Get latest Public Sector vacancies list available on the post updated twice a week. Every day Government organization / companies and Govt of India undertaking organization are looking for young graduates in various disciplines in various public sector departments. In this page, you will get Graduate Government Jobs only, No private vacancies. Candidates who have completed Three years degree in Arts and Science category from AICTE/ Government approved institutes or equivalent, are eligible to apply following Govt Jobs. Eligible Indian Nationals get Latest Graduate Jobs 2020 and Upcoming Graduate Jobs 2020 in the following table.

Read more: Graduate Jobs 2021 | Any Degree Jobs | 25000+ Govt Vacancies

## ✓ Latest Government Jobs 2021 for Graduates / Any Bachelor Degree List:

| Post Name – Total Vacancies | Govt Organization | Last Date |
|---|---|---|
| Multi Tasking Staff (Non Technical) - 9000+ | SSC MTS 2021 | 21-03-2021 |
| Assistant Accounts Officer - 18 | TANGEDCO | 16-03-2021 |
| District Public Relation Officer - 31 | BPSC (Bihar) | 12-03-2021 |
| Supervisor Store - 11 | BRO GREF | 05-04-2021 |
| Officers, Scientists - 06 | IPFT | 01-03-2021 |
| Agriculture Officers - 991 | TNPSC | 04-03-2021 |
| Sub Inspectors - 857 | RPSC | 10-03-2021 |
| Data Entry Operator, Web Designer, Content Writer, Office Assistant, Computer Networking Technician - 433 | DSRVS | 25-02-2021 |
| Superintendent | MNIT Jaipur | 05-03-2021 |
| Marketing Executive, Assistants - 10+ | National Book Trust | 08-03-2021 |
| Combined Civil Services - 252 | JPSC | 16/03/20201 |
| Police Sub Inspector (Civil) - 545 | Karnataka Police | 22-02-2021 |
| Assistant Grade 1, Stenographer Grade 1 - 38 | NPCIL | 23-02-2021 |
| Animator, Production Assistant - 02 | SRFTI Kolkata | 23-03-2021 |
| Non Teaching Posts - 20+ | National Institute of Ayurveda | Feb-21 |




# உலகிற்கே சவால் விடும் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சர்வதேச தலைவர் லார்ட்ஸ் பால்ராஜ்

## மக்கள் தொகையில் மட்டுமே முன்னேற்றம் அடைந்த நம் இந்தியா பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கி இருப்பதன் காரணம் என்ன?

என்கின்ற மிகவும் சக்தி வாய்ந்த ஒரு கேள்வியை உருவாக்கி இதற்கு சரியான பதிலையும் கண்டறிந்து வைத்துக் கொண்டு இவரது டிவிட்டர், முகநூல், வாட்ஸ்அப் குரூப்களுக்கும் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் கேள்வி எழுப்பி வருகின்றார்.

இதற்கு உலகம் முழுவதிலும் இருந்து பொதுமக்களில் ஒரே ஒரு நபர் கூட சரியான பதில் அளிக்கவில்லை என்று தினமும் வருத்தம் தெரிவித்து வருகின்றார்.

ஒட்டு மொத்த இந்தியர்களுக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மிகவும் தேவையான இவரின் இந்த முக்கியக் கேள்விக்கு பொதுமக்களில் யாரும் பதில் அளிக்கத் தெரியாததனால் இந்தியாவில் உள்ள ஒட்டுமொத்த அரசியல் கட்சித் தலைவர்களும் இந்த கேள்விக்குத் தகுந்த பதில் தெரிகின்றதா என்று பார்ப்போம் என்று இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும் இந்த அறிக்கையின் மூலமாக அறிக்கை விடுகின்றார். இந்தியாவில் உள்ள கட்சித் தலைவர்களில் யாரேனும் ஒருவராவது இதற்கு சரியான பதில் அளித்து விட்டால் அந்தக் கட்சித் தலைவர்களுக்கு மட்டுமே வரும் தேர்தளில் முதல்வர் வேட்பாளராக தேர்தளில் போட்டியிடத் தகுதி உடையவர்கள் என்றும் லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்கள் கூறுகின்றார்.

இந்தக் கேள்விக்கு உண்டான பதிலைக் கூறும் கட்சித் தலைவர்கள் மட்டும் தான் முதல்வர் வேட்பாளர் தேர்தலுக்கு உறுதிமொழி வாசித்து தேர்தளில் போட்டியிட தகுதி உடையவர்கள் அப்போதுதான் இந்த வேட்பாளர்களால் நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லமுடியும் என்று தேர்தல் ஆணையம் அறிவிக்க வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையத்திற்கு கோரிக்கை விடுகின்றார்.

தேர்தல் ஆணையம் இதை ஏற்குமா? அல்லது அறிவுடைய அரசியல் தலைவர்கள் இவரது கேள்விக்கு பதில் அளித்து தேர்தளில் போட்டியிட தயார் என்று சர்வதசே தலைவர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் கேட்கும் கேள்விக்கு ஒற்றை பதிலை கூறிவிட்டு தேர்தளில் போட்டியிட்டு வெற்றி பெற்று பொதுமக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச்செய்வார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**LORDS CLUBS INTERNATIONAL**
**சர்வதேச மனிதக்கடவுள்கள் சங்கங்கள்**
**Head Quarters : INDIA**

**LIONS CLUBS INTERNATIONAL**
**சர்வதேச அரிமாக்கள் சங்கங்கள்**
**Head Quarters : AMERICA**

**ROTARY CLUBS INTERNATIONAL**
**சர்வதேச ரோட்டரி சங்கங்கள்**
**Head Quarters : UNITED KINGDOM**

லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சர்வதேச தலைவர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

அயல்நாட்டு கிளப்புகளான லயன்ஸ் ரோட்டரி போன்ற சர்வதேச கிளப்புகளில் இந்தியாவில் உள்ள உறுப்பினர்கள் இந்தியர்களின் காலாச்சாரத்தை சீரழிக்கும் வகையில் ஒன்று கூடி வரம்பு மீறிய மது அருந்துதல் அவர்களின் குடும்பத்தாருடன் கலந்துகொள்ளும் அனைத்து பொதுக்கூட்டங்களிலும் புகுத்துகின்றனர்.

இதனால் அதிக மதுபோதையில் தாம் என்ன செய்கின்றோம் என்று தன்னையும் அறியாமல் வரம்பு மீறி மாற்றான் மனைவியை கூட தவறான கண்ணோட்டத்தில் பார்க்கும் தவறான எண்ணமும் சிலருக்கு ஏற்படுகின்றது. இதனால் சிலரின் மனைவியை அவர்களின் கணவரை விட்டு பிரித்து வசப்படுத்தி கள்ளத்தனமாய் இழுத்துக் கொண்டு ஓடியும் விடுகின்றனர்.

மேலும் சிலர் இந்தியாவில் இருந்து அயல்நாடுகளுக்குச் சுற்றுலா சென்று அங்குள்ள அயல்நாட்டுப் பாலியல் தொழில் செய்யும் பெண்களுடன் தவறாக உல்லாசம் கண்டு அவர்களிடமிருந்து எச்ஐவி போன்ற பல்வேறு பால்வினை நோய் தாக்குதலுக்கும் ஆளாகியும் நோயுடன் நம் இந்தியாவிற்கு நாடு திரும்புவதும் உண்டு.

அதிக மது அருந்தி தவறான பாதையில் செல்லும் இவர்களால் ஆரோக்கியத்துடனும் நீண்டகால ஆயுளுடனும் வாழ முடிவதில்லை. இது ஒருபுறம் இருக்க மாற்றொரு புறம் நம் இந்தியாவின் பணத்தை அயல்நாடுகளுக்கு இவர்கள் வாழ்நாள் முழுவதும் ஆண்டுசந்தாவாக அதிகமாக அள்ளிக் கொடுப்பதையும் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேல் இந்தியாவில் நிகழ்த்தியும் இந்தியர்களின் கலாச்சாரத்தை சீர் கெடுத்தும் வருகின்றனர் இதனால் நம் இந்தியர்களின் பொருளாதாரம் ஆண்டுக்கு ஆண்டு மிகவும் குறைந்து கொண்டே வருவதுடன் பெருமளவு வீழ்ச்சி அடைவதற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணமாகும்.

அயல்நாட்டு கலாச்சாரத்தை இந்தியாவிற்குள் புகுத்திய அயல்நாடுகளின் சர்வதேச கிளப்புகளுக்கு **இந்தியாவில் முற்றுப்புள்ளி வைத்து மாற்று** கிளப்புகளை ஏற்படுத்தி மது இன்றி சேவையுடனும் ஆன்மிகத்துடனும் மதுவிற்கு பதில் மதசார்பற்ற தியானத்தை புகுத்தியும் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியர்களின் களாச்சாரத்தை பேனிக்காப்பதற்காக இந்தியாவில் எனது தலைமையில் அரசு அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்டது தான் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் என்னும் பன்னாட்டு சேவை கிளப்ஸ் ஆகும்.

இதில் அனைவரும் அதிக ஆரோக்கியத்துடனும், நீண்ட கால ஆயுளுடனும் வாழச்செய்யவும் இந்தியர்களுக்கும் அயல்நாட்டு மக்களுக்கும் நம் இந்தியர்களின் கலாச்சாரத்தைப் புகுத்தி அனைவரையும் நல்வழிபடுத்தி ஒற்றுமையுடன் அவர்கள் குடும்பத்தாருடன் நீண்ட கால ஆயுளுடனும் ஒற்றுமையுடனும் மன மகிழ்ச்சியுடனும் வாழவைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் உருவாக்கபட்டுள்ளது. இதில் உலகம் முழுவதும் உள்ள லயன்ஸ் மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் அனைவரும் லார்ட்ஸ் உறுப்பினர்களாக மாற்றப்பட்டு நல்வழியில் மாற்றத்தை ஏற்படுத்தி அனைவரும் பயனடைந்து நீண்ட ஆயுளுடன் நீடூழி வாழையடி வாழையாய் வாழச்செய்து ஏழை எளிய பொதுமக்களுக்கு அனைத்துவகையான பொதுசேவைகளையும் அறம் செய்திடவேண்டியும் இந்தியர்களின் அனைவரது பொருளாதாரத்தையும் வளர்ச்சியடையச் செய்திடவேண்டும் என்றும் இருகரங்கள் கூப்பி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன் என்று உலகமெங்கும் உள்ள அமெரிக்காவைச் சார்ந்த லயன்ஸ் கிளப்ஸ் உறுப்பினர்களுக்கும் மற்றும் யு.கே. வை சார்ந்த ரோட்டரி கிளப்ஸ் உறுப்பினர்களுகள் அனைவருக்கும் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உலக தலைவர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் உருவாக்கி தொண்டு செய்து வரும் இவரது லார்ட்ஸ் கிளப்ஸ்களில் உலகெங்கும் உள்ள அனைவரும் இணைந்து பயனடைந்திட வேண்டுமாய் அன்புடன் அழைப்பு விடுத்துள்ளார்.



LORDS CLUBS INTERNATIONAL
Govt. Reg. No. : 1359 / 2013
We Serve
Lords Ma. Paul Raj
Founder & International President
LORDS CLUBS INTERNATIONAL
- Economic development
- Education Service
- Friendship
- Health service
- Human rights
- Leadership
- Political Service
- Social service
- Spirituality

For Membership Call
98 4055 9673
LORDS CLUBS INTERNATIONAL
Email : lordsclubsinternational@gmail.com
Web : www.lordsclubs.com



# LORDS Ma. PAUL RAJ, Founder & INTERNATIONAL PRESIDENT OF LORDS CLUBS INTERNATIONAL, IS ONE OF THE MOST SUCCESSFUL SOCIAL SERVICE PROVIDERS IN THE WORLD

International social workers help individuals, families, groups, neighborhoods, and communities around the world overcome the challenges they face, such as poverty, substance abuse, or even after a natural disaster.

However, finding international social work positions can be difficult because organizations need candidates that can help people overcome the specific obstacles facing citizens around the world.

Continue reading to find out about the regions that need social workers, a list of issues facing their citizens, and some organizations you could work for.
What Is International Social Work?

Social workers are committed to making a difference in the lives of people within communities. Therefore, international social workers diligently strive to ease suffering and better the lives of people in need around the world.
But that doesn't mean social workers do all of the work themselves.
Instead, social work is about helping those in need to discover new and innovative ways to resolve or cope with the challenges they face. That way, their clients have the skills, knowledge, and empowerment to improve their circumstances and overall life.

Lords Paul Raj, Founder & International President of Lord's Clubs International, is one of the most successful social service providers in the world.